பொது நிர்வாகம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு அறிமுகப்படுத்தும் புதிய நிகழ்ச்சித் திட்டம்

**“பொறுப்புடைமைக்கு ஒரு பெறுமதி”** - அரச சேவையின் செயற்திறனை மதிப்பிடல்

**அறிமுகம்** :-

பொதுமக்களின் எதிர்பார்ப்புக்களுக்கு முன்னுரிமையளித்து, அரச சேவையின் விளைத்திறனை மேம்படுத்துவதன் பொருட்டு கொள்கைகளை வகுத்தலும் நடைமுறைப்படுத்தலும் பொது நிர்வாகம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் பிரதான பணிகளாகும்.

தற்போது அரச சேவையில் ஏறத்தாழ 14 இலட்ச மனித வளம் காணப்படுவதோடு, அவர்களுள் பெரும்பாலானவர்கள் 20 மில்லியன் அளவிலான மக்களுக்கு சேவையை வழங்குவதற்காக தமது பலத்தைக் கொண்டு பல்வேறு மட்டங்களில் பங்களிப்பை நல்கி வருகின்றனர். இருப்பினும், வெகுசன ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் பல்வேறு பிரச்சாரங்கள் அரச சேவை குறித்த கலவையானதொரு அனுபவத்தையே வழங்குகின்றன.

குறித்த நிலைமையை ஆராய்ந்து, அரச சேவையை சரியான திசையில் நெறிப்படுத்தும் நோக்கில் அரச சேவையில் பிரசைகள் மதிப்பீடு மற்றும் சுய விமர்சனப் பாரம்பரியமொன்றை உருவாக்குவதன் பொருட்டு புதிய நிகழ்ச்சித் திட்டமொன்றை அறிமுகப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**02. செயற் திட்டம்**

இவ் எண்ணக்கருவை நடைமுறைப்படுத்துகையில் ஒன்றுக்கொன்று சமாந்தரமாக நடைமுறைப்படுத்தப்படும் 02 கருத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

**கருத்திட்டம்** 01 - **“தோல்வியிலிருந்து வெற்றியை நோக்கி”**

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அரச உத்தியோகத்தர்களை மதிப்பீடு செய்வதன் பொருட்டு நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சை போன்றவற்றின் போது தமது வெற்றி குறித்து முன்வைப்பதற்கான சந்தர்ப்பமே உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டது. இதன் போது தமது செயற்பாடுகளை மிகைப்படுத்தி முன்வைக்கும் திறனுடையவர்களுக்கு தானாகவே பலன் கிட்டுகிறது. எனவே, அறிமுகப்படுத்தப்படும் இப் புதிய நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக அரச உத்தியோகத்தர்கள் தாம் கடமையில் ஈடுபட்டிருக்கையில் தோல்வியுற்ற சந்தர்ப்பமொன்றை முன்வைப்பதற்கான வாய்ப்பே வழங்கப்படுகின்றது. இதன் போது குறித்த தோல்வியின்

ஊடாக உத்தியோகத்தர் கற்றுக் கொண்ட பாடத்தை முதற் சுற்றின் போது எழுத்துமூலமாக முன்வைப்பதற்கு அவருக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

**கருத்திட்டம் 02 - "பிறப்பதற்கு முன்பிருந்தே எனக்காக"**

தாம் தாய் வயிற்றில் இருக்கும் காலத்திலிருந்தே இந் நாட்டின் சாதாரண பிரசைகள் அரச துறையின் ஊடாக வழங்கப்படும் சேவைகளைப் பெற்றுக் கொள்ள ஆரம்பிக்கின்றனர். அரசாங்கத்தின் பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும் வரை ஒவ்வொரு பிரசைக்கும் அரச துறையிடமிருந்து பல்வேறு சேவைகளைப் பெற்றுக் கொள்ள நேரிடுகிறது. இக் கருத்திட்டத்தின் ஊடாக சாதாரண பிரசைகளுக்கு அவ்வாறு தாம் அரச சேவையின் போது பெற்றுக் கொண்ட இனிமையான அனுபவங்களை அல்லது "வெற்றிக் கதையை" முன்வைப்பதற்கான வாய்ப்புக் கிட்டும். பொது நிர்வாகம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு இவ் அனுபவத்தைப் பெற்றுக் கொள்வதற்காக முதற் சுற்றின் போது எளியதொரு படிவம் ஊடகங்கள் மூலம் வழங்கப்பட்டு, தகவல்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

இவ் இரு கருத்திட்டங்களிலும் முதற் கட்டத்தின் போது எழுத்து மூலமாகப் பெற்றுக் கொள்ளப்படும் குறிப்புக்களைக் கவனத்திற் கொண்டு, அவற்றிலிருந்து இரண்டாம் சுற்றுக்கான அனுபவங்கள் தெரிவு செய்யப்படும். இரண்டாம் சுற்றின் போது, தெரிவு செய்யப்பட்ட அனுபவங்களை வாய்மூலமாக முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும். அவ்வாறு முன்வைக்கப்படும் அனுபவங்கள் மூன்றாம் சுற்றிற்குக் கவனத்தில் கொள்ளப்படும். மூன்றாம் சுற்றின் போது மேற்கொள்ளப்படும் பௌதீக அவதானிப்பொன்றின் பின்னர் குறித்த அனுபவங்களுடன் தொடர்புடைய அரச உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்படுவர். அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர்களை மதிப்பீடு செய்வதன் பொருட்டு மனித வள விருது வழங்கல் விழாவொன்று பொது நிர்வாகம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் தேசிய மட்டத்தில் ஏற்பாடு செய்யப்படுகிறது.

மேலதிக தகவல்களுக்கு : www.pubad.gov.lk ற்குப் பிரவேசிக்கவும்.

தொடர்புகளுக்கு : 011 - 2187104